உ

சிவமயம்



அமரர், திருமதி.

# ஞானேஸ்வரி கைலாசபதி

அவர்கள் சிவபதம் அடைந்தமையைக் குறிக்கும்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் திருமதி. ஞானேஸ்வரி கைலாசபதி

மலர்வு : 24.11.1934 உதிர்வு : 02.05.2004

## திதி வெண்பா

சீராரும் தாரண வருடம் சீர் சித்திரை பூர்வமதி
சாராரும் திதி துவாதசி — நேராரும்
சொல்லரிய புகழ் ஞானேஸ்வரி சிவன்பதம்
எல்லவரும் கலங்க ஏகினாள் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

## பஞ்சபுராணம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்: கொல்லி (இராகம் : நவரோஜ்)

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடிர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

— ஞானசம்பந்தர்

### திருவாசகம்

பண்: முல்லை (இராகம் : மோகனம்)

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றிலா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோலி கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலனொர் கைம்மாறே

— மாணிக்கவாசகர்

### திருவிசைப்பா

பண்: சாளரபாணி (இராகம் : ஆநந்தபைரவி)

நின்று நினைந்து இருந்து கிடந்து
எழுந்து தொழும் தொழும்பனேன்
ஒன்றி ஒருகால் நினையா
திருந்தாலும் இருக்க வொட்டாய்
கன்று பிரியாப் போல
கதறுறுவித்தி; வரவு நில்லாய்
நன்றிதுவோ; திருத்தி இல்லை
தடம் பயிலும் நம்பானே

— வேணாட்டடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பண்: சாளரபாணி (இராகம் : ஆனந்தபைரவி)

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனார்

## திருப்புராணம்

பண்: செந்துருத்தி (இராகம் : மத்தியமாவதி)

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்து அருள் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

—சேக்கிழார்

## திருப்புகழ்

(இராகம் : நவரோஜ்)

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வன்தற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

—அருணகிரிநாதர்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் புலம்பல்

அன்பின் வடிவமாய் பொறுமையின் சிகரமாய் மனைவி என்ற சொல்லுக்கு இலக்கணமாய் உங்கள் கைபிடித்த நாள் முதலாக இதயம் ஒன்றாகவும், உருவங்கள் இரண்டாகவும் வாழ்ந்து வாழ்க்கையின் உண்மைத் தன்மை உணர்த்தியும் எனது முன்னேற்றங்கள் இன்ப துன்பங்கள் யாவற்றிலும் துணையாகவும் பங்குகள் எடுத்தும் ஆண்டுகள் ஒன்றல்ல, இரண்டல்ல 52 வருடங்கள் எனது வாழ்க்கையின் ஒளியாய் இருந்து விட்டு எம்மை எல்லாம்விட்டுச் சென்றமையானது எனது எஞ்சிய வாழ்வை ஒரு வெறுமை நிறைந்ததாய், அர்த்தமற்றதாய் ஆக்கிவிட்டது. உமது பிரிவை அறிந்த போது எனது இதயம் சில நிமிடங்கள் துடிக்காது நின்று மீண்டும் துடிப்பதானது எனது இதயத்தினுள் நீங்கள் அணையாத சுடராக இருப்பதினால் தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்மையும் ஆகும்.

**கணவர்**

**கைலாசபதி**

# அம்மா இல்லாமல்

நிரந்தரமற்ற மனித வாழ்க்கையை நிரந்தரம் என எண்ணி நாம் எல்லாம் அர்த்தமின்றி வாழாமல் வாழ்கிறோம். எனது நினைவு தெரிந்த நினைவு அலையைத் தொட்டால், அம்மா ஐயாவுடன் வாழ்ந்த சுகம், பசுமையான காட்சியாக அலை அலையாகத் தொடர்கின்றது. அழகிய அமைதியான சூழல் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு பல வருடங்கள் ஓடிவிட்டன. எமது அழகிய கிராமம் மாவிட்டபுரம் அதன் சிறப்பான கோவில், கீரிமலை கடற்கரை, குலதெய்வம் ஞானவைரவர் கோவில் யாவும் உயிர் பெறுகின்றன வடிவங்களாக. பல புறநிலைக் காரணிகளால் அழிக்கப்பட்ட எமது கிராமம் நினைவு வடிவம் மட்டுமே கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான அம்மா முகமும் துணிவான, தெளிவான ஐயாவும், எமக்கு ஊக்கமூட்டி வாழ்வின் உண்மையை விளக்கிய பாட்டா முகமும், அம்மாவுக்கு துணையாகவும் எமக்கு வழிகாட்டியாகவும் இருந்த மாமாவின் முகமும் எம்மை விட்டு அகலாதவை. எனி எமது ஐயாவுக்கு துணையாகவும் எமது பிள்ளைக்கு ஒரு கலங்கரை வெளிச்சமாகவும் நாம் செயல்பட வேண்டும்.

வேர் அறுக்கப்பட்டு எங்கோ வாழ்ந்து கொண்டுள்ள நாம் எமது பிள்ளைகளை எங்கு விட்டு செல்லப் போகிறோம் என்ற வினா என்னைத் துளைக்கின்றது. அவர்கள் எமது கனவுகளை நிஜமாக்குவார்களா? எனது பிள்ளைகளை ஒழுங்காக தெளிவாக வளர்த்தும் பல வினாக்களுக்கு விடை தெரியாமல் தவிக்கின்றேன்.

எமது நிலை எப்படி இருப்பினும் இந்த மானிட வாழ்க்கையை நிறைவு செய்த எமது உயிர் அம்மாவின் ஆத்மா அமைதி, பெற்று நிறைவு அடைய வைரவர் வழிபாட்டுடன் அம்மாவின் அமைதிப் பயணம் தொடர வாழ்த்தும்

அன்பு மகள்
லோகா காங்கேயன்

## அம்மா என்றால் அன்பு

அம்மா என்றால் அன்பு, அன்பு என்றால் அம்மா என்று இரண்டுக்கும் வேறுபாடுகள் இல்லை என்பதை உணர்த்தி அதற்கு ஓர் இலக்கணமாகவும் திகழ்ந்த எமது தெய்வமே, எம்மை அன்பால், பாசத்தால், தியாகத்தால் எந்த விதமான குறைகள், துன்பங்கள், நோய்கள் எதுவுமே எம்மை அணுகாது இரவு பகலாய் பாதுகாத்து நின்ற தெய்வமே, இன்று அம்மா என்று அழைக்க முடியாது என்ற நிலைமைக்கு எம்மை-யெல்லாம் ஆளாக்கி உங்கள் கடமைகள் யாவும் முடி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடைந்துவிட்டது என்பதினால் தானே எம்மை எல்லாம் விட்டு விட்டு இறைவனுடன் கலந்து விட்டீர்கள். அன்பு பாசம் பண்பு யாவற்றுக்கும் உதாரணமாகவும் பொறுமைக்கு ஓர் சின்ன-மாகவும் தாய் என்ற பெயருக்கு ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்த எமது அன்புத் தெய்வமே இன்று நாம் உம்மை இழந்து அம்மா என்ற சொல்லை இழந்து செயல் இழந்து தைரியம் இழந்து இதயமே வெடிக்கும் அளவுக்கு ஆறுதல் இழந்து நிற்கின்றோம். அம்மா என்று இனிமேல் அழைக்க முடியாது என்பதை நினைத்தால் இதயமே துடிக்க மறுக்கிறது.

கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும், அன்புடனும் பண்புடனும் எம்மை எல்லாம் சீரும் சிறப்பாகவும் வளர்த்து இவ்-வுயர் நிலைமைக்கு ஆளாக்கிய தாயே எம்மை மட்டுமல்லாது பேரப் பிள்ளைகளையும் அன்புடனும் சீராட்டி பாசத்துடன் வளர்த்த விதம் அளப்பரியது. நீங்கள் உங்கள் கடமைகளை சரிவரச் செய்து தாய், பேர்த்தி என்ற இடத்தின் உச்சநிலையில் இருந்துவிட்டு திடீர் என எம்மை விட்டுப் பிரிந்தமை எவராலும் ஈடு செய்ய முடியாத அளவுக்கு எம்மை எல்லாம் நிலைகுலைய வைத்துவிட்டது. பெறாமக்களையும் உமது பிள்ளைகள் போல் அனுசரித்து அன்புடனும் பாசத்துடனும் இன்முகத்துடனும் உணவளித்து வளர்த்த விதம் இவ்வுலகில் யாவராலும் பாராட்டப்பட்டதும் மதிக்கப்பட்டதும் ஆகும். எல்லோருக்கும் ஓர் முன்னோடியாகவும் திகழ்ந்த உங்களை நினைக்கும் போது எமது நெஞ்சங்கள் ஆழ்ந்த துயரத்தின் மத்தியிலும் பெருமை அடைகின்றது.

எவ்விதமான கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் பொறுமையாகவும் இன்முகத்துடனும் நீங்கள் கையாண்ட விதம் எமக்கு நீங்கள் போதித்து தந்த பாடங்கள். எமது எக்கவலைகளும் உம் இன்முகம் கண்டவுடன் ஓடி மறைந்து விடும். இனிமேல் யார் முகம் கண்டு எமது கவலைத்துயர் போக்குவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கடமைகள் யாவற்றையும் சரியாகவும் உயர்வாகவும் அன்புடனும் இன்முகத்துடன் சரிவர நிறைவு செய்து இறைவனுடன் கலந்து தெய்வமாகி விட்டீர்கள். நீங்கள் காட்டிய பாதை, சொல்லித் தந்த பாடங்கள் யாவும் தவறாது வாழ்வோம். இதற்கு நீங்கள் எமது தெய்வமாக இருந்து எம்மை எல்லாம் காத்து நின்று எமக்கு உறுதுணையாக இருக்க வேண்டுகிறோம்.

உங்களை இழந்த பெரும் கவலையின் மத்தியிலும் நீங்கள் செய்து முடித்த உயரிய கடமைகள் உயர்ந்த குணங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக முன்னோடியாக வாழ்ந்த வாழ்க்கை இவைகளை எல்லாம் எண்ணும் போதும் உங்கள் பெருமைகளை உணரும் போதும் எமது மனத்திற்கு நிச்சயமாக ஆறுதல் கிடைக்கிறது.

அம்மா என்று கடைசியாக உங்களை அழைக்கின்றேன். இது நிச்சயமாக உங்களுக்கு கேட்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இதை நிறைவு செய்கிறேன்.

*மகன் ஜெயக்குமார்*

## எனதருமை அம்மாவே...

02.05.2004 இத்தினத்தில் எம்மை எல்லாம் துயரத்தில் ஆளாக்கி எமது அன்னை இறைவனுடன் கலந்த நாள். இந்த நாள் எமது வாழ்வின் சந்தோஷங்களை எல்லாம் இழந்த நாள். அன்பால் பாசத்தால் எம்மை எல்லாம் அரவணைத்து இவ்வளவு உயர்வுக்கும் ஆளாக்கிய எமது தாய் எம்மை எல்லாம் தவிக்க விட்டு விட்டு எங்கு சென்றாலும், ஒரு தடவைக்கு இருதடவை போட்டு வருகிறேன் தம்பி என்று சொல்லிப் போய்வந்த நீங்கள், இம்முறை எதுவுமே இயம்பாமல் எம்மை எல்லாம் விட்டு விட்டு சென்றதுதான் ஏனோ? அப்படித்தான் நாம் என்ன தவறுகள் தான் செய்தோமோ? கடையவன் என்பதினால் எனக்கோ ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத இடம் உங்களின் இதயத்தில் ஒதுக்கி நாம் செய்த தவறுகள் அனைத்தையும் அன்புடனும் கண்டிப்புடனும் எடுத்தியம்பி எம்மை எல்லாம் நல்வழிப்படுத்திய எம் தாயே இனிமேல் எமக்கு அம்மா என்று அழைக்க யார்தான் உள்ளாரோ. மனம் தளர்ந்து உடல் சோர்ந்து போன நேரம் எல்லாம் உங்களின் கனிவான பார்வை பட்டு மனம் தெளிந்து தைரியம் அடைந்தோம். இப்போது உங்கள் பிரிவால் தைரியம் இழந்து மனம் குழம்பிப் போயுள்ளோம். எக்கவலை வரினும் உங்கள் ஆறுதல் மொழி கேட்டு அமைதியும் தெளிவும் அடைந்த நாங்கள் இன்று எல்லாம் இழந்து மனம் குழைந்து போயுள்ளோம்.

பொறுமைக்கும் பாசத்திற்கும், அன்புக்கும் பாத்திரமாக விளங்கிய நீங்கள் சொல்லித்தந்த பாடங்களையும் உணர்த்திய உண்மைகளையும் எடுத்தியம்ப ஆயிரமாயிரம் வார்த்தைகள் போதாது.

இன்னும் நீங்கள் கற்பிக்க வேண்டிய பாடங்கள் பல இருந்தும் எம்மை எல்லாம் இடை நடுவில் விட்டுவிட்டு ஏன்தான் போனீர்களோ?

நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை, அன்புடனும் அமைதியுடனும் மற்றவர்களுக்கு நீங்கள் உணர்த்திய உண்மை வாழ்க்கை உன்னதமான சேவைகள் இவைகள் எல்லாவற்றையும் எண்ணும்போது எம்மையறியாமலே எம்மனம் அமைதியும் பெருமையும் அடைகிறது.

எமது அன்புத்தாயே நீங்கள் காட்டித்தந்த பாதையில் உண்மையானவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் வாழ்ந்து உமக்கு பெருமையும் சிறப்பும் ஏற்படுத்தி தருவோம் என்று இத்தருணத்தில் உறுதி பூண்டு இதை முடிவு செய்கிறேன்.

*மகன் இரவிச்சந்திரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்தின் திரு உருவே

பாசத்தின் திரு உருவே
பண்பான குல விளக்கே
வேளையும்தான் வந்ததென்று
காலன் அவன் கவர்ந்தானோ!

மாவை மண்ணில் மதிப்புடனும்
மகிழ்வுடனும் வாழ்ந்த நாட்கள்
சோபை மிக்க திருநாட்கள்
வாழ்வில் அவை வசந்த நாட்கள்

வைரவரை வணங்கித் தினமும்
வளம் யாவும் பெற்று வாழ்ந்தோம்
மாவை முருகன் மனம் கனிந்து
மன நிறைவைக் கொடுத்து வைத்தான்

வந்தவர்கள் யாரெனினும்
வளமாக உபசரித்து
சொந்த பந்தங்கள் சூழ்ந்துவர
சீர் சிறப்புடனே வாழ்ந்தீர்கள்

சிங்களத்தின் கொடுமையினால்
மங்களத்தின் மாட்சி மிக்க
எங்கள் குல வீடிழந்தோம்
தேசம் விட்டுத் தேசம் வந்தோம்

மண்மாறி வந்த போதும்
பண்பாடு மாறிடாமல்
கண்ணாக எம்மிரண்டு
கண்மணிகளைக் காத்துவந்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம்மா என்றழைத்தால்
எப்பொழுதும் பதில்வருமே
இப்பொழுது என்ன செய்வோம்
அப்பம்மா! அப்பம்மா!

அன்பான கணவரையும்
பண்பான மக்களையும்
மருமக்கள் பேரரையும்
மறந்துதான் சென்றீரோ!

காலம் இட்ட கட்டளையை
கடந்து செல்ல முடியாதே
வேளை வந்தழைத்ததென்று
வேல் முருகன் பதம் சேர்ந்தீர்

உங்கள் ஆத்மா என்றென்றும்
உயர்ந்த இடத்தை அடைந்திடுமே
வேல் முருகன் பாதத்தில்
வேண்டும் அமைதி பெற்றிடுமே.

மருமகள் யோகாம்பிகை ஜெயக்குமார்

## மருமகள் கதை

அன்புத் தாயாகவும், மாமியாகவும் என்னுடன் இருந்து, எங்களுக்கு உதவி செய்யும் நிலைமை இருந்தால் அதில் பங்கு எடுத்து, எங்களை சந்தோசத்தில் வைத்திருந்தீர்கள். நான் இல்லாத நேரங்களில் என் பிள்ளைகளுக்கு என்ன தேவையென்று அறிந்து ஒரு தாயென்ற ஸ்தானத்தில் கடமை செய்தீர்கள். என்ன கஷ்டம் வந்தாலும் மாமி என்று வந்து கேட்டால் இனிமையாக எனக்கு ஆறுதல் சொல்லி என்னை சந்தோசப்படுத்துவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அமுது என்னும் புத்தகம் விருப்பம் என்று தெரிந்து அதைக் கடைசியாக கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்து விட்டு எங்களை ஆழ்ந்த துயரத்தில் விட்டுவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். உங்கள் ஆத்மா இறைவனுடன் கலக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு இச்சிறு கதையை முடிக்கின்றேன்.

மருமகள் வசந்தினி

## MY GRANDMA

My Grandma was very special
She was very dear to me
and I know that she has done good whilst alive
I will miss her dearly
But I know God will care for her
And in that I take comfort
I will still miss her, though
For she was important
She was caring
She was kind
She was my grandma
and I miss her

*Jeyan Jeyakumar*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPAMMA

Appamma has gone, but I will never forget her. She was a fun loving , caring person. She also didn't like any help for small things because she was an independent lady. I will miss her very much. Because there will be no one to tell me to eat after coming back from school or to make tea or coffee for me in the morning. She was a very special person to me. She also never liked to leave her grandchildren. Because she wanted to see them grow up.When my dad shout at me, Appamma always steps in and tells my dad not to shout at me. When appapa shouts at appa or periappa she always steps in and tell him not to shout, because she loved her children and didn't want no one shouting at one another. She also was very outgoing and never likes to stay on her own, and should always be surrounded with her loved ones.

Appamma is going to bring great sadness to the people who loved and who she loved.

That's why I love her!

Please god look after appamma!

Appamma now that you've gone to a better place where you will suffer no pain or sorrow that you suffered here. Please look after us and guide us through each day that is given to us without no troubles.

***Your ever loving***
***grand daughter***
***Pavena***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPAMMA

Appamma was great
And also a mate
I hope she enjoys this new life
And never gets any strife
Now she'll enjoy
And see a boy
Who's in heaven
And won't be here when I'm eleven
We miss her everyday,
We never leave her astray
So now she's gone
I promise her that I'll think about her on and on
I love her with all my heart
And I'll never part
Because she's my great Nan
And I was one of her biggest fan
I thought she was happy and healthy
But also she was quite wealthy
I know she misses me
And so do I with loads of glee

***From her ever loving***
***Grand daughter***
***Usha***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி புலம்பல்

கூடிப் பிறக்காத சோதரியே! செகம் விட்டு
வாடிப் போய் விட்டாயே! வாழ்வினிலே
நாடியடங்கு முன்னே நலங்கண்டு நாமிருந்தோம்
ஆடிப்போய் விட்டோமே அனலில் கலந்துவிட

நட்புக் கிலக்கணமாய் நாள்முழுவதும் வாழ்ந்து விட்டு
எட்டுத் திக்கிலும் உன் பெயரைச் சொல்ல வைத்து
கட்டுடைத்துக் கடந்திட்டாய் கதறியழ எமை விட்டு
கிட்ட இனி வாராயோ! கீதை மனதைத் தாராயோ!

பொங்கு கண்ணீரை போக்க வழியறியேன்
ஏங்கித் தவித்தே புலம்புகின்றேன் சகோதரியே
எங்குமே உம்மைக் காண்பதற்கு முடியவில்லை
ஏக்கமது நெஞ்சை அடைத்து நிற்குதம்மா

சிவசோதி

# மைத்துனர் துயர்

பாசமிகு மச்சாள்! எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்த உங்களை இழந்து தவிக்கிறோம். எங்கள் பால பருவத்தில் தாயை இழந்து கலங்கி நின்ற பொழுது எங்களுக்கு ஒரு நல்ல அன்னையாய், மச்சாளாய், சகோதரியாய் நின்று அரவணைத்து ஆறுதல் கூறி அன்பு காட்டினீர்கள். தம்பி, தம்பி என்று அழைத்து அன்பை பொழிந்தீர்கள்.

எனது திருமணத்தின் பின்பும், எனது மனைவி, பிள்ளைகளுடன் அன்புடன் பழகி பாசத்தை வளர்த்தீர்கள். பல ஆண்டுகள் நீங்கள் வெளிநாட்டில் இருந்தாலும் எங்களுடன் தொடர்பு கொண்டு கதைத்து மகிழ்வீர்கள்.

இப்படி பாசத்தை காட்டி மகிழ்ந்த நீங்கள் ஆறாத வேதனையில், எம்மை ஆழ்த்தி விட்டு அமைதியாய் துயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு விட்டீர்கள். கடைசி நேரத்தில் உங்கள் அருகிருந்து இறுதி சடங்குகளில் பங்கு கொள்ள முடியாமையையிட்டு மனம் வருந்துகிறோம்.

என்றும் உங்கள் கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை மனமார பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"

**மைத்துனர்**

**சி.பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்**

## மைத்துனன் புலம்பல்

பாசமுடன் எனை வளர்த்து பக்குவங்கள் பல சொல்லி
பாரினிலே எனைவாழ வைத்தீரே உத்தமியே
நேசமைத்துனன் நானிங்கு நின்வதனங் காணாது
நெடுந்துயரங் கொண்டே வாடுகின்றேன் மைத்துனியே

உடன் பிறந்த சகோதரனின் உத்தம துணைவியே
கடந்த காலத்தைக் கண்முன் கொண்டு வர
நடந்து கண்ணீரே நிதம் விழியில் வருகிறது
படர்ந்த பாசத்தை பொழிவதனி எப்போது?

நல்ல மனம் கொண்டவரே! நலம் தந்து நின்றவரே!
இல்லறத்தை இனிதாக வாழ்ந்திருந்தவரே!
கல்லிலும் நீர் கசியச் சென்றதேன் கனதூரம்
அல்லும் பகலும் நான் அதையெண்ணித் தேம்புகின்றேன்.

— ரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்துடன் நினைவு கூருகிறோம்

எல்லாம் வல்ல இறைவனின் கடாட்சம் நிரம்பிய குடும்பத்திலே உதித்து, மாவைக் கந்தனின் நிழலிலே வளர்ந்து, உற்றார் உறவினர்களின் நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்த திருமதி ஞானேஸ்வரி கைலாசபதி கடந்த வைகாசி மாதம் 2ம் திகதி இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு இறைபதம் அடைந்து விட்டார்.

உரிய காலத்தில் தனது மாமன் மகனாகிய திரு.சின்னையா கைலாசபதியை திருமணம் புரிந்து தனது வாழ்க்கையை நல்லற நெறியில் நடத்தி வந்தார். இவரது இல்வாழ்வின் பெரும்பயனாக இவர் லோகாம்பிகை எனும் பெண் அரசியையும் ஜெயக்குமார், ரவிச்சந்திரன் எனும் இரு ஆண் நற் குழந்தைகளையும் பெற்றுப் பெருவாழ்வு கண்டார்.

அடிஅடியாக வந்த சைவ மரபின் வழிநின்று வாழ்க்கையை மிகவும் தூய்மையான வழியிலே, தனக்கும், தன்னைச் சார்ந்தோரிற்கும் பயனுடையதாக்கிக் கொண்டார். ஆலய வழிபாட்டில் அசையாத நம்பிக்கை கொண்ட இவர் இயல்புக்கேற்றவாறு தான தருமங்கள் வழங்கி சிறப்பானதோர் வாழ்வை வாழும் பேற்றை மாவைக்கந்தன் இவருக்கு அருள் பாலித்திருந்தான்.

புகுந்த வீடு சிறப்புறும் வண்ணம் சுமைதாங்கியாக விளங்கிய இவ் இல்லத்தரசி தமது 70ம் வயதில் லண்டன் மாநகரில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்பு, பொறுமை, சேவை என்பவற்றின் சிகரமாக விளங்கிய ஓர் உத்தமியை நினைவ கூர்ந்து, அவரின் குல தெய்வமாகிய மாவைக் கந்தன், கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான், தளயசிட்டி வைரவப் பெருமானின் பாதார விந்தங்களின் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.

திரு. இ. கதிர்காமலிங்கம் (சம்பந்தி).
திரு. இ. செல்வகுமார் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேறாமக்கள் புலம்பல்

நின் வயிற்றில் பிறக்கின்ற பாக்கியந்தான் கிடைக்கவில்லை
ஏன் எங்களை மறந்திட்டாய்? எங்கு நீ சென்றிட்டாய்?
எதையம்மா நாங்கள் மறப்போம் எல்லாம் உன் நினைவுதானே!
எத்தனை பிள்ளைகள் என்றாலும் எல்லோருடனும் சமஅன்பு
பாசம் தனைக் கொட்டி நீங்கள் பார்த்து மகிழ முடியவில்லையே!
நோய் என்ற பேய் பிடித்து நொந்து விட்டீர்களே!
இலங்கையில் தங்கி வாழ்ந்திட மறுத்து விட்டீர்களே!
அருகிருந்து ஆறுதல் சொல்ல எங்களை அழைக்கவில்லையே!
ஆவலுடன் ஓடிவந்து எம்முடன் பேசவில்லையே!
இன்னும் வாழ்வதற்கு எத்தனை காலங்கள்
இங்கிருந்து ஏன் போனீர்கள் ஏங்கித் தவிக்கின்றோம்.

அஜீ. அஜீந்தா. சுதா

## பேறாமகன் துயர்

அன்ரி என்று அழைத்து உங்கள் வீடு தேடி வந்த போதெல்லாம் இன்முகத்துடனும் அன்புடனும் ஆசையுடன் உணவளித்த நீங்கள் சிறுவயதில் தெரியாமல் தவறுகள் இழைத்த போதெல்லாம் அன்புடன் கண்டித்து புத்திமதிகள் பல சொல்லி உங்கள் பிள்ளைகளுடன் எவ்விதத்திலும் வேறுபாடுகள் காட்டாது அன்பால் பாசத்தால் உங்கள் பிள்ளைகளுக்கு மேலாக என்னை ஆளாக்கிய விதம்தான் இன்று எனது இவ்வுயர் நிலைமைக்கு வழிவகுத்தது என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்மையும் ஆகும்.

எனது அம்மாவை இழந்த போது அன்ரி நீங்கள் எனது அம்மாவாக இருக்கின்றீர்கள் என்று மனம் ஆறுதல் அடைந்து இருந்தேன். ஆனால் இன்று எனது அம்மாவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து அன்ரி என்ற அம்மாவையும் இழந்து தவிக்கின்றேன்.

எப்பிரச்சினைகள் கவலைகள் வரினும் உங்களை நாடி வந்து, ஓடிவந்து எடுத்தியம்பிய போதெல்லாம் எனக்கு மன ஆறுதலையும் நிம்மதியையும் தந்தீர்கள். இன்று உங்களை இழந்து எனது அமைதியை இழந்து தவிக்கிறேன். ஆழ்ந்த கவலையின் மத்தியிலும் உங்கள் அன்பையும் என்மீது காட்டிய பாசத்தையும் எண்ணும் போதெல்லாம் என் மனம் அமைதி அடைந்து பெருமையால் நிரம்பி நிற்கின்றது. உங்கள் ஆத்ம சாந்தி அடைய இறைவனை வேண்டு-கின்றேன்.

**பெறாத மகன் க.ராஜீவன்**

## அன்பு நிறை மாமி

பண்பான மனைவியாக
அன்பான அன்னையாக
பாசம் மிகு மாமியாக
நேசம் மிக்க பேத்தியாக
வாசம் வீசிய மலர் இன்று
வாடி உதிர்ந்து போனதுவோ!

மாவை முருகன் திருவருளும்
மனமுருகி வைரவரின்
சோபை நிறை பேரருளும்
சோபித்து தொடர்ந்து வர
வேளையது வந்ததென்று
வேல்முருகன் அழைத்தனனோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாய் மலரும் முகமலர்ச்சி
ஒரு புன்னகையில் பொங்கும் மகிழ்ச்சி
நேசம் மிகுந்த பெரு நெஞ்சோ
பாசம் பொழியும் நீர் வீழ்ச்சி
பேரிடம் பேசும் நெகிழ்ச்சி
யாரிடம் நாம் காண்பது இனி?

அன்பு நிறை மாமியின் பிரிவால்
அவதியுறும் அனைத்து உள்ளத்திற்கும்
வல்ல வேல் முருகன் துணையால்
நல்லதொரு அமைதி கிட்ட
உள்ளத்தின் உள்ளிருந்து
உங்களுக்காய் பிரார்த்தனைகள்.

திரு. திருமதி. சாந்தி இரவீந்திரன்

## மறந்தாயோ எமையெல்லாம்

இயல்மிகு இலங்கைத் தீவின்
மகுடமாம் மாவிட்டபுரத்தில்
வந்துதித்த பெண் பாவாய்
எங்கு சென்றாய் எம்மைவிட்டு
போனாயோ அவன் பாதம்
பற்றிடவே - பளை வைரவனும்
மாவைக் கந்தனும் உடன் வர

பரணியிலே பல்வேறு இடம் எல்லாம்
பாங்குடனே நீ வாழ்ந்திட்டாய்
அன்பாலே அனைவரையும் சொல்லாலே கவர்ந்தாய் நீ
மறப்போமா உனது குரல்
நாமறிவோம் உனதன்பை
ஏன் போனாய் எம்மைவிட்டு
மறந்தாயோ எம்மை எல்லாம்
சாந்தி சாந்தி

Dr. பொ. குகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி உரை

மாவைக்கந்தனது மணியோசை கேட்டு ஆறுகால பூசை நேரங்களில் தமது இல்லத்திருந்தே வழிபாடுகள் இயற்றும் வழமை கொண்டவர்கள் கைலாசபதியின் பெற்றோர்கள். தூய்மையான இதயத்தோடு சிறந்த நற் தருமங்களே தமது கடமைகளென ஆற்றி உய்ந்தது இக்குடும்பம். உற்றார் உறவினர் யாவரும், இறைவனது அம்சமேயென்ற நம்பிக்கை வளர்த்தவர்.

"உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது குற்றலத்துறை கூத்தனல்லான் நமக்குற்றார் ஆருளரோ" என்று அடிக்கடி அவரது தந்தையார் ஓதுவார்.

அருமையான சமயப்பற்றுதல்களோடு இனிமையான புண்ணிய சீலர்களாக வாழ்ந்த கைலாசபதி குடும்பம் இவரது துணைவி-யாரோ குசேலரது மனைவி சுசீலை போன்று, நாம் அறம் செய்யும் தொண்டர்களே என்ற நினைவில் வாழ்ந்து அவர்களது போற்று-தல்கட்கும் ஆளாகினர்.

யான் 1990ம் ஆண்டில் இடம் பெயர்ந்து பிறிதோரிடத்தில் வாழும் போது மாதாமாதம் எமக்கு நிதியுதவி தந்து எம்மை உயிர்வாழக் காப்பாற்றியது இக்குடும்பம். இதற்கு ஞானேஸ்-வரியே பெருந்துணை போனதாக அறிகிறோம்.

நல்லவையாற்றி, நல்ல சிந்தனைகட்கு உயிர்கொடுத்து நல்லறங்களை இனிதே நல்கி நன்றாக வாழ்ந்த ஞானேஸ்வரி, இவ்வுலகில் இவ்வளவுதான் என்பணியென்று நினைந்து இறை-வனடி இணைந்த செய்தி, எம்மை ஒருகால் மனவருத்தத்தில் ஆழ்த்தியது. அன்னாரது ஆத்ம சாந்திக்கு என்றும் மாவைக் கந்தனது பாதாரவிந்தங்களில் மலர்தூவி பிரார்த்திப்போம்.

சுபம்

மஹாராஜா ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா. பிரதமகுரு
மாவையாதீனம். தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

## அமரத்துவமடைந்த திருமதி ஞானேஸ்வரி கைலாசபதி அவர்களுக்கு சமர்ப்பணம்

இங்கிலாந்து நாட்டின் தெற்கு எல்லையில் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தவர் ஞானேஸ்வரி அம்மையார். அம்மையாருடைய குடும்பம் மாவிட்டபுரத்தில் மகத்தான குடும்பமாகும். அறவோருக்கு அளித்தல், விருந்து எதிர்கோடல், ஆலயப்பணிகள் ஆற்றல், சுற்றம் தழுவல் ஆகியவற்றில் முன்னின்று பெருமை பெற்ற குடும்பம் இதுவாகும்.

"அற்கா இயல்பிற்று செல்வம் அதுபெற்றால்
அற்குப் ஆங்கே செயல்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப தாம் பெற்ற செல்வத்தை நன்கு பயன்படுத்தியவர்கள் இவர்கள். அதாவது செல்வம் நிலையில்லாதது. அது எமக்கு கிடைத்த பொழுதே நிலையான நற்பணிகளை ஆற்ற வேண்டும் என்பது குறட்பாவின் கருத்தாகும். அமரர் ஞானேஸ்வரி அவர்கள் பிறந்த குடும்பத்தின் பெருமையையும் வாழ்க்கைத் துணைவன் கைலாசபதி அவர்களின் உத்தியோக மேன்மையையும், பிள்ளைகளின் நற்பழக்கவழக்கங்களையும் ஒன்றாகச் சிறப்படைய வாழ்ந்து காட்டியவர் அம்மையார் அவர்கள். இங்கிலாந்து நாட்டிலே இல்லற வாழ்வு முழுமையாகக் கழிந்தது என்றாலும் பிறந்த நாட்டின் பற்றும் உறவினர்களுக்கு ஆதரவு வழங்கி வந்த பெருமையும் அம்மையாருக்குண்டு. இந்த நாட்டுத் திருத்தலங்களையும் சிறப்பாக மாவிட்டபுரம் துர்க்கையம்மன் கோயில் ஆகியவற்றையும் நன்கு நேசித்து பேருதவி புரிந்து வந்தவர் அம்மையார். இதனால் இவர்களின் குடும்பத்துக்கு அருளாசி நிரம்ப உண்டு. அம்மையாரின் இறுதிக்கிரியைகள் எசக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் நடைபெற்று சைவத் தமிழ் முறைப்படி தகனம் செய்யப்பட்டதை அறிகின்றோம். எனவே அமரர் ஞானேஸ்வரி அம்மையார் திருக்கைலாயத்தில் அமர்ந்து ஆத்ம சாந்தி அடைய எங்கள் பிரார்த்தனைகள் உரித்தாகுக.

சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

*தலைவர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*

*தெல்லிப்பழை. ஸ்ரீலங்கா*

## நற்பதத்தை நாடிச் சென்ற ஞானேஸ்வரி

நற்பதத்தை நாடிச் சென்ற கைலாசபதி ஞானேஸ்வரி அவர்கள் செய்த தர்மகாரியங்கள் அனைத்தும் தெய்வத்துக்கு சமர்ப்பணம். மாவைக்கந்தன் ஆலய உற்சவம் 25 நாளும் தண்ணீர்ப்பந்தல் நடத்துதல், அவர்கள் இல்லத்தில் எவர் வந்தாலும் அன்பாக உபசரித்தல், அவர்கள் குல தெய்வமாகிய தலைசிட்டி ஞானவயிரவர் மேல் அளவு கடந்த பக்தி. வீட்டில் பலாமரம் காய்த்தால் முதல் பழம் வயிரவருக்கு. மாம்பழம் என்றாலும் அப்படித்தான். தங்கள் உபயம் நவராத்திரி முதலாம் நாள். பிள்ளையார் கதை 21 நாள், திருவெம்பா முதலாம் நாள், சிவராத்திரி முதலாம் சாம பூசை இந்த நாட்களை தவிர மற்ற நாட்களிலும், பால், தயிர், இளநீர் பழவகை கொடுப்பது வழக்கம். அவரது மாமனார் திரு. சின்னையா அவர்கள் 1949ம் ஆண்டு சிங்கப்பூரில் இருந்து வந்தவர். 1977ம் ஆண்டு வரை அவர் செய்த தொண்டுகள் அளவிட முடியாது. வயிரவர் கோயில் மூல மூர்த்தி விக்கிரகம் தங்கள் உபயமாக ஏற்றுக் கொண்டார். அதற்கு வெள்ளி அங்கியும் செய்வித்தார். உற்சவமூர்த்திக்கு வெள்ளிபீடம் திருவாசி, நாய் வாகனம் மாலைவேளை தினசரி மாலை 6 மணிக்கு தீபம் ஏற்றுதல். எங்கள் ஆலயம் மாவிட்டபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணியவரை ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் திருப்பணிக்கு தேவையான பண உதவி செய்தார்கள். அவரும் சிவபதம் அடைய நாட்டு நிலைமையும் மோசம் அடைந்தது. எல்லோரும் வெளிநாடு சென்றார்கள். ஆனால் வயிரவரை மறக்கவில்லை ஞானேஸ்வரியின் மகள் லோகா. இன்றும் வயிரவருக்கு பணம் அனுப்பிக் கொண்டு தான் இருக்கிறார். 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் இலண்டன் சென்ற பொழுது ஞானேஸ்வரியின் இல்லத்துக்கும் சென்றேன்.

அவர்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். காலன் அவரை விரைவில் கவர்ந்து விட்டான். விதியை வெல்ல எவராலும் முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாள், வயிரவரை பிரார்த்திக்கிறேன். அவரின் பிரிவால் கவலையுறும் குடும்பத்தார் அனைவருக்கும் ஆறுதல் கூறி அமைகிறேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**பிரமஸ்ரீ அ.துரைச்சாமி ஐயர்**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்**
**வீணியவரை, மாவிட்டபுரம்**

## அனுதாபச் செய்தி

ஈழத்திருநாட்டில் நாற்றிசையும் பழமையும் மகிமையும் வாய்ந்த பாவம் வினை அறுக்கவல்ல திருப்பதிகள் சூழ் நீராடுதுறைகள் தீர்த்தங்கள் பல உள. இத்திறமான்பு பெற்ற நீராடுதுறைகளில் ஒன்றாகிய கீரிமலைத் தீர்த்த மகிமையினை ஒட்டி எழுந்த திருத்தலமே மாவிட்டபுரம்.

இக்கிராமத்தில் குதிரை முகம் நீங்கப்பெற்ற மாருதப் புரவிகவல்லியினால் எடுக்கப்பட்ட பெருங்கோவில் தான் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில். பல ஊர் மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் கோயிலாகவும் குலதெய்வமாகவும் விளங்குவது மாவிட்டபுரம்.

இவ்வரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரத்தில் மாவைக் கந்தன் இனிதுறைந்து அருள்பாலிக்கும் புதிய பதியில் அமரர் ஞானேஸ்வரி அவர்கள் தனது அன்புக் கணவர் கைலாசபதியுடன், இல்லறமாய் நல்லறம் நடாத்தி லோகாம்பிகை, ஜெயக்குமார், இரவீந்திரன் ஆகிய மூன்று செல்வப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். அவர்களே தனயன் எவ்வழி தலைவியும் அவ்வழியே என கணவனின் வாழ்க்கைப் படகை ஓட்டிய பெருமை அவர்களுக்குண்டு.

இவ்வாறே தம்மக்களை அன்போடு வரவணைத்து அன்பமுதூட்டி அவர்கள் நல்ல பண்புள்ள சைவப்பற்றுள்ள பிள்ளைகளாக வளர்வதற்கே தன் வாழ்வைச் செலவிட்டார் என்றால் மிகையாகாது. இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தும், பாரிய இழப்புக்களுக்குள்ளாகியும் மீளக்குடியமர முடியாமலும் வீட்டு வளங்களை இழந்தும் மிகக்கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருந்தும், தன் கணவனையும் பிள்ளைகளையும் பராமரித்தும் ஆலயப்பணியும் செய்து வந்துள்ளார் என்பது பாராட்டுக்குரியது.

அமரர் அவர்கள் இங்கிலாந்திலுள்ள எசெக்ஸ் என்னுமிடத்தில் தனது சிரேஸ்ட மகனுடன் இறுதி வாழ்க்கையை அமைதியாக நடாத்தி வந்துள்ளமை பெருமைக்குரியதாகும். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் கணவருக்கும் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் எனது அனுதாபத்தையும் ஆறுதலையும் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**ஏ.சீ.விஜயராசசிங்கம்**<br>
ஓய்வுபெற்ற கணித முதன்மை ஆசிரியரும்<br>
சமாதான நீதவானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியைகள்

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படுங் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்தியது எனப் பொருள். கிரியைகள் செய்வதினால் இறந்த ஆத்மா பாவங்களினின்றும் நீங்கி. சிவபதம் அடையும் என்பது நம்பிக்கை. தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும்போதும். இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக் கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தரா என்பது கௌசிகர் வரலாற்று வாழ்வின் மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஏழு பிறப்புக்கும் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர் கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவஅருளுக்கு ஆளாவார். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெருந் தீமைகள் நேரும்.

சிவலோகத்துச் செம்பொற் கோயிலில் வினைப்பயனை விளைவிக்க வேதவித்தாகிய பார்வதிதேவியுடன் வீற்றிருப்பவர் சிவபெருமான் என்பது சைவசமயத்தவர்களது நம்பிக்கை. எங்கள் சமயத்தில் இறக்கும் ஒருவருக்கு நடைபெறும் அபரக்கிரியைகள் அப்பரிபூரணரின் சிவலோகஞ் சேர்ப்பிக்கும் பாவனையில் நடைபெறுவனவே. இங்கு நடைபெறும் கிரியைகள் அவருக்குச் செய்யப்படும் பூசையே எனக் கொள்க. இக் கிரியைகள் துக்கசாகரத்திலிருக்குஞ் சுற்றத்தோர்க்கு ஓரளவு சாந்தியையும் மன நிறைவையும் அளிக்கும். இக்கிரியைகளை நம்மவருக்குச் செய்பவர்கள் சைவ நெறி நிற்கும் சைவக்குருக்களாவர்.

**அபரக்கிரியை வகைகள் :** இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவை உத்தர கிரியை சிரார்த்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரே சைவர் என்று சொல்லுந் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோருக்கு மாத்திரமே சைவக் கிரிகைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயானவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிராத்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரணக்கிரியைகள் :** சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியையில் மூன்று பகுதிகள் உள. அவையாவன பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி என்பனவாம்.

**பேரிகையடித்தல் :** ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்திபண்ணி மேளத்திலே பிரம்ம, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும்போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் "இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும். பூமியிலும் மறுஉலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்திற்கும் ஐசுவரியம் உண்டாக வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினத்திற்கும் நன்மை உண்டாக வேண்டும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கின்றேன். சிவபெருமான் இதனை இரட்சிக்க" என்பதாகும். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கின்றார்.)

**உடற்சுத்தி :** சிவாசாரியார் பந்தலின் நடுவில் சிவகும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள்நீர், சிவகும்பநீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து, புத்தாடை புனைந்து நீறு சாத்தி பூச்சூடி பிரண வாசமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாசாரியர் பஞ்ச சுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை உடலின்மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரம மந்திரங்களைப் பதித்து, அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து, அவ்வுடலுக்குந் தனக்கும் நாடி சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டுவந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும் :** பாவங்களை நீக்குதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காகப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுடலை சேர்தல் :** உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவராவர்.) ஓமாக்கினியிலிந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும் கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நான்கு முழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச்சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றிவந்து அதன்மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

**தீயிடல் :** கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைக் சுற்றிவந்து கும்பநீரை உடலுக்குத் தெளித்துக் குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். தீ இடும் பொழுது "அக்கினிதேவனே, பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைந்து கொண்டே தீ இட வேண்டும்.

**அத்திசஞ்சயனம் :** அத்திசஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்த எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல், இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

**நக்னதானம் :** இது தகனக் கிரியை முடிந்தபின் இறந்தவரின் பசி தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியருக்கு ஆடை, அரிசி முதலியனவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

**அந்தியேட்டி :** இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய - கடைசிநாள். இட்டி - யாகம். இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க் கடன் என்றும் கூறுவர்.

**பாடாண பூசை :** (பாசஷாண பூசை) ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை, இப்பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும், கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவ பதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருத்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏகோதிட்டம் :** ஆசௌசம் நீங்கிய அடுத்தநாள் இறந்தவருடைய ஆன்ம சுத்திக்காகவும், நற்கதியடையும் பொருட்டுச் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து, அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமானளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும்வரை எதிர்ப்படாமலிருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்கப்பட வேண்டிய பொருட்கள் உணவுப்பொருட்கள், உடை, திருநீற்றுப்பை, செபமாலை, குடை, மிதிதடி, பொன் முதலியவையாம்.

**சபண்டீகரணம்:** ஏகோதிட்டத்திற்கு அடுத்தநாளிலே பிதிர் தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்ததற்கு நடைபெறும் கிரியை. சபண்டீ கரணத்தால் ஆன்மா சுத்திபெற்றுச் சிவலோகஞ் சேரும். இக் கிரியை பிண்டமிட்டுச் செய்வதனால் இது சபண்டீகரணம் எனப்படும்.

**பிண்டத்திற்குரிய பொருள்கள் :** அரிசி, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆவனவாம். பிதிரர்க்குச் செய்யும் இக் கிரியையைப், பிதிர் தேவர்கள் பெற்று, இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

## சிராத்தம்

**சிராத்தம் :** சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படும். சிரத்தையாவது பற்று, அன்பு. இறந்தவர்களில் அன்பும் பற்றும் உடையவர்களினாலேதான் இக்கிரியை செய்யப்பட வேண்டும். இகிரியையின் உயிர்நிலை அன்பு.

சிராத்தம் பிதிர்கருமம் என்னும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர் கருமங்களையும் குறிப்பது. ஆயினும் இது நம்நாட்டில் ஆட்டைத்திவசம், திவசம் என்பவற்றையே குறித்து வழங்குகின்றது. திவசம் திதி எனவும்படும்.

**ஆட்டைத்திவசம் :** ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின் செய்யும் சிராத்தம் ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம் எனவும், அதனையடுத்து ஆண்டு தோறும் அதே திதியில் செய்யப்படுவதை வருடசிராத்தம் அல்லது திவசம் எனவும் கூறப்படும்.

**நைமித்திய சிராத்தம் :** பிதா மாதா முதலாயினோர் இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும்பொழுது விசுவாசத்தோடு, விதிப்படி செய்வது நைமித்திய சிராத்த மெனப்படும். எத்திதியில் இறந்தாரோ, அத்திதியில் சிராத்தம் செய்தல் உத்தமமாம். திதி தெரியாவிடின், அந்த மாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். மாசம் தெரியாவிடின் ஆடி, மாசி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் அத்திதிகளில் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபக்க நாட்களில் செய்து கொள்ளலாம். (புரட்டாதி மாதத்து அபரபக்கத்துப் பிரதமைமுதல், அமாவாசை வரையான காலம் மாளய்பக்க காலம்)

**தீர்த்த சிராத்தம் :** மாதந்தோறும் அமாவாசையில் பிதாமாதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர்தேவர்களின் தாகசாந்திக் கருமம். அமாவாசை, சூரியகிரகணம், சந்திரகிரகணம், விதிபாதயோகம், உத்தராயணம், சித்திரை வருடப் பிறப்பு, மாதப்பிறப்பு, கார்த்திகை மாத சுக்கிலபக்க நவமி, புரட்டாதி மாதக் கிருட்ண பக்கத் திரயோதசி என்னும் இந்நாட்களில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தருப்பணஞ் செய்து சிவனடியாரோடு உண்ணல் தீர்த்த சிராத்தம் எனப்படும்.

நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடுபேறு கொடுப்பதற்காகவும், புண்ணிய காலங்களிலே தென்புலத்தாரைக் குறித்துத் தருப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுவதற்காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார்.

**அமாவாசை சிராத்தம் :** மனிதர்களுடைய ஒரு மாசம் பிதிரர்களுக்கு ஒரு நாளாம். ( சுக்கிலபக்கம் இரவும், கிருஷ்ண பக்கம் பகலுமாம்.) ஆதலால் மாசந்தோறும் வரும் அமாவாசையில் தருப்பணம் செய்து விரதம் அனுட்டிக்க வேண்டும்.

**எள்ளும் தண்ணீரும் இறைத்தல் :** தருப்பணம் திருப்திக்காகச் செய்யப்படுவது. தருப்பையைக் குறுக்காகப் பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து எள்ளுக்கலந்த நீரைக் சுட்டுவிரல் மூலம் விழச் செய்யப்படுவது. இந்நேரம் தலைமுறையான பிதிரர்கள் பெயர் சொல்லிச் செய்யப்படும். தருப்பண முடிவிலே "என்குலப் பிதிர்களே பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்" என்று சொல்லித் தருப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.

**காயா சிராத்தம் :** காயா காசியிலுள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிராத்தம் செய்யின் வேறு சிராத்தம் செய்ய வேண்டியதில்லை என ஞான நூல்கள் கூறும். இச்சிராத்தம் பிதிர்களுக்குத் திருப்தியைக் கொடுப்பதுடன், போக மோட்சங்களையும் கொடுக்குமாம். காயா சிராத்தத்தால் ஏழு கோத்திரத்துள்ள நூற்றொரு குலமும் விருத்தியாகும்.

இப்படியான வேறும் பல புண்ணிய தீர்த்தங்கள் சிராத்தம் செய்வதற்கு உண்டு. அவை: அயோத்தி, மதுரை, மாயை காஞ்சி, அவந்தி, துவாரகை, திருக்கேதீச்சரம், திருகோணமலை கன்னியா நீரூற்றுக்கள், கீரிமலை, முன்னேஸ்வரம் போன்றவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராத்தம் செய்யும் இடம் :** இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்தி செய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிராத்தத்துக்கு உரிய பொருட்கள் :** எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசுப்பால், பசுந்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீழை, முல்லையிலை, முசுட்டையிலே, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள் :** கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசனிக்காய், முருங்கைக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

**பொருள் இல்லாதவர் சிராத்தம் :** சிராத்தத்திற்கு பொருள் இல்லாதவர் காய் கனி கிழங்கு எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்கக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து திலதருப்பணம் பண்ணித்தான் திருத்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணஞ் செய்தற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக் கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலாம். இதற்கு விதி,

"இடிகொண்மாவினாற் பிண்டமேயாயினு மிடுக
இலையென் றிடிலெள்ளுடன் புனல்கையாலிறைக்க
வல்லவம் பெறாதாயினுமாவின மருந்தப்
புல்லாயினும் போடுக.... — *திருச்செந்தூர்ப் புராணம்*

**சிராத்தத்துக்க உபயோகமாகும் பத்திரம் - மலர்:** துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

**சிராத்தத்துக்கு ஆகாதவை :** மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண் பகப்பூ முதலியன.

**சிராத்த தினத்திலே செய்யத்தக்க புண்ணிய காரியங்கள்:** சற்பாத்திரர்களுக்கு அன்னதானம் ஆடைவகை முதலியன வழங்கலும். திருக்கோயிலிலே கடவுளுக்கு அபிடேகம், பூசை, திருவிளக்கேற்றுதல் முதலியனவுமாம்.

**சிராத்த தினத்திலே செய்யத் தகாதன :** தயிர் கடைதல், நெற்குத்துதல், நெய் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராத்தங் கொடுக்கத்தக்க பாத்திரர் :** பிதிர்தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீட்டையேனும், அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்-களுக்குச் சிராத்தங் கொடுக்கலாம். வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டுகடவுளை மெய்யன்-போடு வழிபடுபவரும், தம்மைப்போலவே பிறரும் நன்னெறியில் நின்று உய்ய-வேண்டுமென்றெண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவரு-மானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரார்க்குச் சிராத்தங் கொடுத்த-லாகாது. வேதசிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும், பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளைத் திருத்தியுடன் ஏற்றுக் கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்குச் சிராத்தங் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

**சிராத்தம் நடைபெறும்போது செய்யத்தக்கன :** வேதபாராயணஞ் செய்தல், தமிழ் வேதங்களையும் புராணங்களையும் ஓதுதல், இவை பிதிர்களுக்கு மிகத் திருத்தியானவையாம்.

**உபகாரம்:** சிராத்த முடிவில் ஆசாரியருக்கு உபகாரஞ் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரஞ் செய்யும்போது அஃது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர் தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

**சிராத்த காலம் :** இராக் காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாளிகை வரையுள்ள காலைப் பொழுதிலும், இராக் காலத்தின் இறுதி முகூர்த்த-மாகிய இரண்டு சந்தியாகாலமும் தவிர்ந்த ஏனைய நேரங்கள் பிதிர் சிராத்தத்திற்கு உரியனவாம்.

**உணவு :** சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவம், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும், திருமாலும், பிரம்மாவும் தருமதேவதையுமாகிய சகலருங்கூடி அதிதி வடிவமாய் வருவரென்று மெய்நூல்கள் கூறிகின்றன.

அரச கொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள்பேணிப்
பரவருங் கடவுட்போற்றிக் குரவரும் விருந்துண் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுர மாடநீடி மலர்ந்துள பதிகளெங்கும். — பெரியபுராணம்

## சிவதீக்ஷை ஒன்றே மோக்ஷத்திற்கு காரணமாகும்

சூர்ணோச்சவத்தினால் சரீரசுத்தியுண்டாகி சிவாக்கினி தீண்டயோக்கிய-மாகும் அந்தியேட்டியினால் மந்திர தந்திர கிரியா லோபங்களும் கலாதீத குற்றங்களும் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் சுமங்கலிப்பெண் இறந்தால் நிறைநாழி வைக்கவும். மனைவி இருக்க கணவன் இறந்தால் அவர் பாதம் கழுவி வீட்டு வாசலில் தெளிக்கவும். சனிக்கிழமை இறந்தவர்க்கு தென்னை அல்லது கமுகம் பிள்ளை வைக்கவும். தன்ஷ்டாப் பஞ்சமி என்கின்ற அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி நஷத்திரங்களில் இறந்தால் நீற்றுப் பூசணிக்காய் கட்டவும்.

தூலசரீரம் பஞ்ச பூதங்களாலானது. அதுமாத்திரமன்றி சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்கின்ற பஞ்சபூதகாரணிகளாய் உள்ள சூக்கும பூதங்களும் (தன் மாத்திரை) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற உட்கருவி (அந்தக்கரணம்) சேர்த்து புரியட்டகம் என்கின்றசூக்கும தேகத்தை-யுடையதாகவும் இருக்கின்றது தூலதேகம் அழிந்த பின் சூக்கும தேகம் உயிர் மோட்சம் அடையும் வரைக்கும் அதனோடு இருக்கும் சூக்கும தேகத்திலிருந்து நரகலோகத்தில் துன்பம் அனுபவிப்பதற்காக யாதனா சரீரம் தோன்றும். அப்படியே சுவர்க்கத்தில் இன்பம் அனுபவிப்பதற்கான பூதசார சரீரம் தோன்றும் நம் தந்தையார் இறந்து விட்டால் அவர் அரூபியாய் விட்டார்கள், அதனால் அவர்கள் இவ்வுலகத்தில் தாம் செய்து அனுபவித்தது போல் அனுபவிக்க முடியாது, ஆகையால்தான் பிதிரர்களையும் இறந்த ஆத்மாக்களுக்கு உரியவர்களையும் வருந்தி அழைத்து பூசை, தானம், தர்ப்பணம், நைவேத்தியம் முதலியன கொடுத்து அவர்களை முதல் திருப்திப்படுத்தி அவர்களைக் கொண்டே நம்மவர்களுக்குச் செய்விக்க வேண்டியவற்றை செய்விக்க வேண்டும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு ஐம்புலத்தா றோப்பல் தலை" — திருக்குறள்

"மைந்தரைப் பெறுகின்றது மாசிலாப்
புத்தி அன்போடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம் முறைக் கேற்ற
வந்த பிதிர்க்கட னாற்றுதற் கேயன்றோ" — கந்தபுராணம்

"ஆங்கதன் பின்னர்க் காமமறம் பொருட் பேற்றினோடும்
ஒங்கு கிப்பிதிரர் வானோர் கடன்களி ஒழிவும் வேண்டி
மாங்குயில் கிளவி மென்றோள் மனைவியை மணப்பர்"

— காஞ்சிபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தில் ஒளி விளக்காய் இருந்து எங்களின் உயர்வுக்காக ஊன்று கோலாய் வாழ்ந்து காட்டிய எமது அன்னையின் அமரத்துவச் செய்தி கேட்டு உடன் வந்தும், ஈமச்சடங்குகளின் போது உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசியின் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்-தோருக்கும் அந்தியேட்டி வீட்டு கிருத்திய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள்.


இங்ஙனம்.

**கணவன், மக்கள்,**

**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ச

- முருகேசு
  - சின்னையா + விசாலாட்சி
    - கைலாசபதி
      - லோகாம்பிகை + காங்கேயன்
      - ஜெயக்குமார் + யோகாம்பி
      - இரவிச்சந்திரன் + வசந்தினி
    - பாலசுப்பிரமணியம்
    - கௌரிதேவி
    - நடேசமூர்த்தி
    - சாம்பசிவமூர்த்தி
    - அம்பிகாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org